**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.269/2020**

**பி.வா.சா. – 1– ஞானப்பிரகாசம்**

**நாள். 23.01.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் சகோதரர் தர்மராஜா 1953 ல் பிறந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் சகோதரர் தர்மராஜாவிற்கு என் தகப்பனார் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் நான் தான் செய்து வைத்தேன். எங்கள் அனைவரது திருமணத்திற்கு பிறகும், தாவா சொத்தை பொதுவாக தான் நாங்கள் அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல. 24.09.1975 ல் என் தகப்பனார் தாவா சொத்தை வா.சா.ஆ.2 ன் படி அடமானம் வைத்தார் என்றால் சரிதான். அந்த கடன் தொகையை என் தகப்பனார் தான் திரும்ப செலுத்தினார் என்றால் நான் தான் செலுத்தினேன். என் பெற்றோருக்கு நான், தர்மராஜா, வாதி ஆகியோர்கள் சேர்ந்து தான் மாதம், மாதம் பணம் கொடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. 13.09.1988 ல் எங்கள் ஊரில், எங்களுக்குள் பஞ்சாயத்து ஏதும் நடக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. எங்களுக்குள் வாய்க்கரலாக பேசியோ, பஞ்சாயத்து மூலமாகவோ சொத்துக்களை பிரித்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 2 முதல் 7 பிரதிவாதிகள் பெயரில் பட்டா எண்.1455 சம்பந்தமாக ஆட்சேபணை மனு ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. தர்மராஜா பெயரில் பட்டா எண்.783 சர்வே எண்.64/1 ஏ நிலத்தை வாங்கியுள்ளதை ஆட்சேபித்து நான் மனு ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. என்னுடைய பாகத்தை பிரித்து கொடுக்க நீதிமன்றத்தில் கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். ஆரோக்கியமேரிக்கு(வாதி) திருமணம் நடந்த போது எனக்கு 21 வயது இருக்கும். அப்போது தர்மராஜாவிற்கு 17 வயது இருக்கும் என்றால் இருக்கும், மேஜராகவில்லை. வாதி ஆரோக்கியமேரிக்கு செய்ய வேண்டிய சீர்வரிசைகளை என் தகப்பனார் தான் செய்தார் என்றால் சரியல்ல. 11.09.1989 ல் எங்களுக்குள் பாகவிஸ்தி செய்து கொண்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு சட்டப்படி பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று அவர்களது வழக்கறிஞர் தெரிவித்தார். ஏற்கனவே வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பிறகு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கு முடியுமா என்பதை குறித்து விளக்கம் அளிப்பதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.01.23 15:30:30 +0530

Additional District Judge,

Dindigul.